O.S.102/2021

Date: 08.06.2023

Pw–1 – கருப்பையா

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)**

1. தாவா சொத்து நஞ்சை நிலம் என்றால் சரிதான். சொத்தின் உரிமையாளர் செங்கோல்மடம் என்றால் சரிதான். தாவா சொத்தும், அதை சுற்றி உள்ள சொத்துக்களும் செங்கோல்மடத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். செங்கோல் மடத்தின் தலைமையிடம் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. செங்ககோல் மடத்திடம் இருந்து குத்தகைக்கு எடுத்த நபர் அவரவர் சொத்தினை அவரவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான்.

2. ஆதியில் குத்தகைக்கு எடுத்த நபர்களிடமிருந்து கைமாறி தற்போது வெவ்வேறு நபர்கள் உள் குத்தகைக்கு எடுத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். செங்கோல் மடத்திலிருந்து பல வருடங்களாக குத்தகையை வசூல் செய்ய யாரும் வரவில்லை என்றால் சரிதான். மடத்தில்இருந்து குத்தகை வசூல் செய்ய வராததால் அனுபவம் செய்யும் நபர்கள் அரசாங்கத்திற்கு தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த அடிப்படையில் தான் தபசில் சொத்தை செந்தில்வேல்பிள்ளையின் மனைவி மாரியம்மாள் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான்.

3. மாரியம்மாளுக்கு முன்பாக தாவா சொத்து அவருடைய கணவர் செந்தில்வேலின் அனுபவத்தில் இருந்தது என்றால் சரிதான். மாரியம்மாளின் அனுபவத்தில் 80 செண்ட் நஞ்சை நிலம் இருந்து வந்தது என்றால் சரிதான். மேற்படி 80 செண்ட் நிலம் 3 வெவ்வேறு சர்வே எண்களில் அதாவது 486/4, 487 மற்றும் 488 ஆகியவற்றில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி 80 செண்ட் இடம் 3 பகுதிகளாக இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த 80

Sd/–Tr.P.Kumar, ADM Sd/–கருப்பையா

செண்டிற்கு கீழ்புறமாகவும், வடபுறமாகவும் பாசன கால்வாய் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

4. மேற்படி 80 செண்டிற்கு மேல்புறமும், தென்புறமும் 1–ம் பிரதிவாதிக்கு இடம் இருந்து வருகிறது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி அனுபவம் செய்து வரும் இடமும் செங்கோல் மடத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 80 செண்ட் இடம் 3 பகுதிகளாக இருந்து வரும் நிலையில் மத்தி பகுதியில் 40 செண்ட் இடமும், வடபுறம் 16 செண்ட் இடமும், தென்புறத்தில் 24 செண்ட் இடமும் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி 3 நிலங்களுக்கும் தனித்தனி வரப்பு உள்ளது என்றால் சரிதான்.

5. மேற்படி மாரியம்மாள் கைவசம் இருந்த 80 செண்ட் இடத்தை நான் அவரிடமிருந்து வாங்கியதாக கூறுகிறேன். அதேபோல், 1–ம் பிரதிவாதி மேற்படி இடத்தை வாங்கியதாக சொல்கிறார். அதனால், ஆரம்பத்தில் எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் தகராறு ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த தகராறு காரணமாகத்தான் அ.வ.எண்.82/2008 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அ.வ.எண்.82/2008–ல் உள்ள தபசில் சொத்தும், இந்த வழக்கு தபசில் சொத்தும் ஒரே சொத்தா அல்லது வெவ்வேறு சொத்தா என்றால் இரண்டும் ஒரே சொத்துதான். அந்த வழக்கில் எனக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போதும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6. நான் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கு மீண்டும் வழக்கு தாக்கல் செய்து அதே பரிகாரத்தினை இந்த வழக்கிலும் கோரியுள்ளதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சாஆ–1ன் பேரில் 1–ம் பிரதிவாதியால் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு அவருடைய வருகை

Sd/–Tr.P.Kumar, ADM　　　　　　　　Sd/–கருப்பையா

தவறுகை காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்பாணை வாசாஆ–3 என்றால் சரிதான். மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை வாசாஆ–4 என்றால் சரிதான்.

7. அவஎண்.82/2008 வழக்கிற்கு பின்னிட்டும் எங்கள் இருவருக்கும் இடையேயான பிரச்சினை தீரவில்லை என்றால் சரிதான். அதன் பிறகு தான் தீர்ப்பாணையை சீர்திருத்தம் செய்ய கோரி நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. அந்த உத்திரவை எதிர்த்து 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்த சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரிதான். அது தான் வாசாஆ–7 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்பேரில் கீழமை நீதிமன்றத்தில் ஐ.ஏ.எண்131/2017 உத்திரவு ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

8. தற்போது நான் இந்த வழக்கை 32 செண்டிற்கு மட்டும் தாக்கல் செய்துள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான். வாய்க்கால் வரப்புடன் 32 செண்ட் பூமியில் தனியாக இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்தின் விஸ்தீரணம் 80 செண்ட் என சொல்லி அதற்கான எல்கையை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் 32 செண்டையும் தனியாக காண்பித்து அதற்கும் எல்கை காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ளது 80 செண்டிற்கு வேறு எல்கையும், 32 செண்டிற்கு வேறு எல்கையும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள எல்கையின் படி 80 செண்டிற்குள் 32 செண்ட் உள்ளதா அல்லது தனியாக உள்ளதா என்றால் 32 செண்ட்டையும் உள்ளடக்கியது தான் 80 செண்ட் இடமாகும். மேற்கண்ட விபரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

Sd/–Tr.P.Kumar, ADM Sd/–கருப்பையா

9. பிராது தபசிலில் 32 செண்ட் இடத்திற்கு 3 பக்க எல்கை தான் சொல்லப்பட்டுள்ளது என்றும், 4 பக்க எல்கை சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பிராதில் சொல்லியுள்ள சொத்து விபரத்தை படித்து பார்த்தால் தாவா சொத்தினை தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள இயலாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.82/2008 வழக்கில் 80 செண்ட் நிலமும் என் கைவசம் இருப்பதாக கூறப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லியுள்ள சொத்து விபரங்கள் தவறானது என்றும், எல்கை தவறானது என்று சொன்னால் சரியல்ல.

10. 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டு வழக்கு 2.7.2014–ல் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். அந்த சமயத்தில் 1–ம் பிரதிவாதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. 10.7.2014–ல் 80 செண்ட் இடத்தில் மத்தியில் உள்ள 40 செண்ட் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி மருத்துவமனையில் இருந்து திரும்பியபோது அவர் சொத்தை நான் ஆக்கிரமித்து விட்டதாக காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் இல்லை. நான் 1–ம் பிரதிவாதியின் சொத்தை ஆக்கிரமித்த பிறகு தான் தீர்ப்பாணையில் சீர்திருத்தம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன்.

11. நான் சொல்லும் 40 செண்ட் இடத்தினை தான் எதிர்கோரிக்கை 2–ம் தபசில் சொத்தாக 1–ம் பிரதிவாதி காண்பித்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி 40 செண்டடிற்கு வடபுறம் உள்ள 16 செண்டும், தென்புறம் உள்ள 24 செண்டும் 1–ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, என்னிடம் தான் உள்ளது. 80 செண்ட் இடம் என் அனுபவத்தில் தான் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/–Tr.P.Kumar, ADM                                        Sd/–கருப்பையா

தாவா சொத்தின் அனுபவத்தில் இருப்பதை காட்ட நான் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மாரியம்மாள் எனக்கு எழுதிகொடுத்த பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். மாரியம்மாள் மேற்படி பத்திரத்தை 1980 ல் எழுதிகொடுத்தார்.

12. மாரியம்மாள் எனக்கு தாவா சொத்தை பொறுத்து எந்த ஆவணமும் எழுதிகொடுக்கவில்லை என்றும், 1–ம் பிரதிவாதிக்கு தான் எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் சம்பந்தமாக வி.ஏ.ஓ விடம் எழுதி வாங்கியுள்ளேனா என்றால் எழுதி வாங்கியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பிறகு எழுதி வாங்கியுள்ளேன். விஏஓ விடம் கடந்த 15 வருடமாக ஒவ்வொரு வருடமும் எழுதி வாங்கி வருகிறேன். விஏஓ 80 செண்ட் இடம் என் அனுபவத்தில் இருப்பதாக எழுதிகொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி விஏஓ எழுதிகொடுத்த ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வா.சா.ஆ–8 விஏஓ விடம் எழுதி வாங்கியதாகும். வா.சா.ஆ–8 ஐ போலதான் 15 ஆவணங்கள் என் கைவசம் உள்ளதாக நான் சொல்கிறேன். வாசாஆ–8 மோசடியானது என்றும், அதை விஏஓ கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

13. தாலுகா அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அடங்கல் கணக்கில் 80 செண்ட் இடம் என் அனுபவத்தில் இருப்பதாக துலங்காது என்றால் சரிதான். 80 செண்ட் இடம் எந்த காலத்திலும் என்அனுபவத்தில் இருந்திருப்பது கிடையாது என்றும் என் அனுபவத்தில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றும், 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றும், அதை அவரிடம் ஒப்படைக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. மாண்புமிகு உயர் நீதிரமன்றத்தின் உத்திரவிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், என் பிராது தள்ளுபடி

Sd/–Tr.P.Kumar, ADM Sd/–கருப்பையா

செய்யப்படவேண்டும் என்றும், 1–ம் பிரதிவாதியின் எதிர்கோரிக்கை அனுமதிக்கப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/–கருப்பையா

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பித்து சாட்சி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்ட பின்பு என்னால் சான்றொப்பம் இடப்பட்டது.

Tr.P.Kumar

கூ.மா.உ.நீ.
அம்பாசமுத்திரம்.